X ஈ 0213

அன்புப் பழம்நீ தொகுத்தது

# அண்ணாவின் முத்துக்குவியல்

*அண்ணாவின் இலக்கியக் கடலின் நன்முத்துக்கள்*

**நால்வர் நூலகம்**
104, கோவிந்தப்ப நாயகன் தெரு
சென்னை—600 001

34953

விலை ரூ. 2-00

நால்வர் நூலக வெளியீடு : எண் 15

முதல் பதிப்பு : டிசம்பர்' 78

உரிமை : முத்தமிழ் நிலையம்

மேலட்டை ஓவியம் : மனோ

அச்சிட்டோர் : கற்பகம் அச்சகம்

: சென்னை—600 002

# முன்னுரை

முத்துக்குவியல்கள்! ஆம், முத்துக்குவியல்கள் மட்டுமல்ல; அறிவுலகின் நவமணிக் களஞ்சியமான அண்ணாவின் செந்நாவிலிருந்து சிதறிய முத்துக்களின் சிதறிய குவியல் தொகுதி. பகுத்தறிவின் ஒளிமிக்க அறிவு முத்துக்கள். அழகிய சொல்லணி பொருளணிகளாகிய பன்னிற மணிகளிடையே மிளிரும் முத்துக்கள்! இவை வெள்ளைத் தாளில் அச்சிடப்பட்டு அழகாகத் தரப்பட்டால் விரும்பாதவர் யார்?

அண்ணா ஓர் அரசியல்வாதி. ஆனால் அவர் கண்கள் அரசியலுலகுடன் நிற்பதில்லை. அவர் ஓர் அறிஞர் ஆனால் அவர் அறிவு, அறிஞர் சிறு அனுபவங்கட்கு அப்பாற்பட்டது. அவர் பொருளாதார ஆராய்ச்சியாளர். ஆனால் அவர் ஆராய்ச்சிப் பொருளைத் திரட்டிக் குவித்து, அதற்குப் பூசையிடும் முதலாளிகள் ஆதிக்கத்துக்கு ஒத்தூதும் ஆராய்ச்சி யல்ல. அறிஞர் அறிவைக் கடைந்து பாமரமக்கள் வாழ்வில் அவற்றை மறுமலர்ச்சியுறத் தூவுபவர் அவர்.

உலக அறிஞர் கூற்றுக்கள்: உலக அரசியல் நிகழ்ச்சிகளில் புதைந்த தத்துவங்கள்; பொருளாதாரச் சிக்கல்கள்; தொழிலாளியின் வாழ்க்கைப் புதிர்கள்; திராவிடர் நிலை; பொது உடைமை ஒளியும் புக அஞ்சும் திராவிடத்தின் செறியிருள்; அடிமை நாடுகளிலும் அடிமை

இனங்களிலும் இல்லாத, அடிமைகளும் கனவு' காணமுடியாத அடிமைத்தனத்திலூறிய நிலை- ஆகிய எல்லாத்துறைகளிலும் அண்ணாவின் தொலை நோக்கும் ஒளியாற்றலுமுடைய ஒளி விளக்கம் இருளைத் துளைத்து அரையிருளையும் அகற்றிப் பொருள்களை நமக்கு உள்ளதை உள்ளவாறு எடுத்துக் காட்டி மனத்தில் பதியச் செய்ய வல்லது. அவ்விளக்கத்திற்கு விளக்கம் தேவையில்லை—எல்லா விளக்கங்களையும் அவர் சொல்திறன் விளக்க வல்லது. பகுத்தறிவு சான்ற அறிவுரை ஆற்றல் மிக்கது. அண்ணா வின் அறிவுரை அவ்வாற்றலுடன் விளக்கமும், விளக்கத்துடன் கலையழகும், கலையழகுடன் உள்ளத்திற் பதிந்து ஐயம் நீக்கிச் செயலாற்ற லமைக்கும் திறனும் உடையது. அறிவுலகக் கடலிலிருந்து அன்னார் எடுத்த ''மணிமிடை முத்துக் குவியல்கள்'' திராவிடத்தில் பேரொளி விளக்கமளித்து, இருளும் மடமையும் மிடிமை யும் அடிமையும் போக்குமாக!

இவ்வுரை மணிகளைப் பத்திரிகைகளிலிருந் தும், பத்திரிகைகளில்கூட வெளிவராத, அவர் களாலேயே எடுக்கப்பட்ட சொற்பொழிவுக் குறிப்புக்களிலிருந்தும் எடுத்துத் தொகுத்த தோழர் அன்புப் பழம்நீ அவர்களின் முயற் சிக்கு, தமிழகம் கடமைப்பட்டுள்ளது.

தமிழ் மன்றம்,
சென்னை
20—9—1950

கா. அப்பாத்துரை

# பதிப்புரை

தமிழின் பெருமை இன்று தரணியெல்லாம் முழங்கக் கேட்டு இன்புறுகின்றோம்.

தமிழரின் புகழ் உலக முழுவதும் பேசப்படுகின்றது.

வழிவழியாகப் பேரறிஞர் பலர் அவ்வப்போது எழுத்தாலும் உரையாலும் பெருமையை உணர்த்தினார்கள்; புகழைப் பரப்பினார்கள்.

ஆயினும், இந்த நூற்றாண்டின் இறுதியில், சற்று வேகமாக—உறங்கிக் கிடந்த தமிழ் மக்கள் எழுச்சி பெற்றார்கள். தமிழின் தன்னிகரில்லாத் தன்மையை உணர்ந்தார்கள். அதோடு அரசியல் உலகில் தன்னுரிமையையும் அறியத் தொடங்கினார்கள்.

மிகச் சாதாரண மக்கள் எனப்படுவோர் அனைவரும் அரசியலைப் பற்றியும் ஆட்சி முறையைப் பற்றியும் தமிழின் மேன்மை பற்றியும் உணர்ந்தார்கள்.

இதற்கெல்லாம் காரணமாக அமைந்தவர் அறிஞர் அண்ணா அவர்கள் என்பதை நாம் என்றும் மறப்பதற்கில்லை.

அவருடைய சொற்பொழிவைக் கேட்டு மகிழப் பதினாயிரக்கணக்கில் மக்கள் கூடினர். பாமரர், படித்தோர், மாணவ—மாணவிகள், அலுவல் புரிவோர், அலுவல் அற்றோர், பெண்கள் ஆகிய பல்வேறு மக்களும் கூடி, கேட்டு, ரசித்தனர்.

அண்ணா பேசாத கூட்டம் இல்லை; ஈடுபடாத துறை இல்லை என்ற நிலை ஏற்பட்டது.

எல்லா மக்களின் இதயங்களிலும் எல்லாத் துறைகளிலும் அண்ணா தனியான ஒரு சிறப்பு மிக்க இடத்தைப் பெற்றுத் திகழ்ந்தார்.

சமீப காலமாக, தமிழின் மறுமலர்ச்சியும் அரசியல் விழிப்பும் அண்ணாவின் பேச்சாலும் எழுத்தாலும் ஒளி மிகுந்ததாயிற்று.

எந்தப் பொருளையும் அவர் நுட்பமாக ஆராய்ந்தார். எதிலுமே அவரது உரையில் ஒரு புது நோக்கு மிளிர்ந்தது; நகைச்சுவை இழையோடியது.

அவருடைய உரையில், வரலாறு காணமுடியும்; மூடப் பழக்கவழக்கங்களை முறியடிக்கும் திறன் இருந்தது; இலக்கியக் காட்சிகளை எடுத்து இயம்பும்போது புலவர்கள் கூட அதன் நயத்தைக் கண்டு இன்புற்றனர். அரசியல், பொருளாதாரம் ஆகிய எதிலுமே ஈடு இணையற்ற சிறப்புப் பெற்றிருந்தார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன், தமிழ் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று அவர் முதல் அமைச்சரானபின், அவருடைய பேச்சும் அளவுகடந்த நிதானமும் மெருகை ஊட்டின. எதிர்க் கட்சியினரையும் ஒருங்கிணைத்து, தேச ஒற்றுமையிலும் ஐக்கிய மனப்பான்மையிலும் ஆர்வம் காட்டிய பான்மை மேலும் அவருடைய பெருமையை உயர்த்தியது.

இதனால், இதர மாநிலத்தவர்களும் மத்திய ஆட்சியாளரும் மதித்துப் போற்றும் அளவுக்கு அண்ணாவின் புகழ் உயர்ந்தது.

அயல் நாட்டு விஜயத்தின்போது, அவரது உரையைக் கேட்டோர் அனைவரும் வியந்தனர்; போற்றினர்; புகழ்ந்தனர்.

இதுகாறும் நாம் கேட்டு, ரசித்த, அண்ணாவின் அழகு தமிழ்—அடுக்குத் தமிழ் உரைகளைப்போல் இனி எங்கே, எப்படிக் கேட்க முடியும்?

இந்த நூற்றாண்டில் அண்ணாவைப்போல் ஆற்றல் மிக்க ஒருவரைக் காண்பது அரிதினும் அரிது என நாட்டு மக்களின் ஒருமனதான எண்ணத்தைப் பெற்றிருந்த சொல்லின் செல்வர் இன்று நம்மிடையே இல்லை. அவரை இழந்து தவிக்கிறோம்.

துக்கம் தோய்ந்த இந்த நாட்களில், முன்னர் அவர் பேசிய பேச்சுச் செல்வங்களும், எழுதிய எழுத்தோவியங் களுமே நமக்குத் துணையாக இருந்து ஆறுதல் அளிப்பன வாகும்.

அன்புடன்:
பதிப்பகத்தார்

# அண்ணாவின்

# முத்துக்குவியல்

## பாமர மக்கள் பாராளும் காலம்

"பாமரமக்கள் பாராளும் காலம் இது!" என்று பாடினார் கவி இக்பால். புலிவேடம் போட்டோர் முன், எலிபோலும் முயல்போலும் அடங்கிக் கிடந்த மக்கள், விழித்தெழுந்தால் இந்நிலை நிச்சயம் ஏற்பட்டே தீரும். அதிலும் மகத்தான போர்களுக்குப் பிறகு மறுமலர்ச்சி தோன்றுவது வரலாற்று உண்மை.

## அணுக்குண்டும் அறிவுக்குண்டும்

அணுக்குண்டு கண்டு உலகம் அதிசயிக்கிறது; ஆனால் அச்சமுமடைகிறது; அதன் அழிவுச் சக்தி என்னென்ன கேடு தருமோ என்று! ஆனால் அதே விஞ்ஞான அற்புதத்தை நன்னெறியிலே பயன் படுத்தினால், பலன் ஏராளம் என்று கூறுகின்றனர். சந்திரமண்டலம் சென்று வரலாம் என்றார் ஓர் விஞ்ஞானி! விஞ்ஞானம் அறிவின் விளைவு. அறிவு ஆக்க வேலை அழிவு வேலை

இரண்டுக்கும் பயன்படும். பொதுநலம், சுயநலத்தை அழித்தொழித்தால் அறிவும், அதன் கூறான விஞ்ஞானமும், அதன் விளைவுகளான புதிய புதிய கருவிகளும் அழிவு தராமல் நன்மை பொழியும். பொதுநலம், பாட்டாளி ஆட்சியிலேதான் மலர முடியும். அந்த ஆட்சியின் வெற்றியினால் மட்டுமே உழைப்பு ஊரழிக்கும் காரிய மாகாது தடுக்கவும், விஞ்ஞானம் விபரீதத்தைப் பொழி யாது நன்மைகள் பயக்கக் கூடியதாக அமையவும் வழி பிறக்கும். அணுக்குண்டு கண்டு அஞ்சும் உலகு இன்று, அதே சமயத்தில் பல்வேறு இடங்களிலே, அறிவுக் குண்டு வீசப்பட்டுக் கொடுமையும் மடமையும் ஆணவமும் அறியாமையும் அழிந்துபடுவது கண்டு மகிழ்கிறது. அணுக் குண்டின் அட்டகாசத்தைக் கண்டு மனித அறிவு அழிவுக் காகப் பயன்பட வேண்டுமென்று வெறுப்படையும் அன்பர் களுககு இது கூறுவோம்: அறிவினால் ஆகாதது ஒன்றில்லை.

## தோழர் வரதராஜனார்

ஆதிக்கம் செலுத்த விரும்பும் ஆரியர்களுக்கு ஒரு புயல்! மாணவர்களுக்கு ஓர் தென்றல்! பழகும்போதே, இனி என்றும் இவரை மறத்தல் முடியாத காரியம் என்ற எண்ணத்தை மனத்திலே பதியச் செய்து விடும் பேச்சு!

உள்ளமெல்லாம் பார்ப்பனரல்லாதாரின் முன்னேற்றங் குறித்த அக்கறை! இடி முழக்கம் போன்ற சிரிப்பு— கண்டிக்கத் தொடங்கினால் காரம்!

வேடிக்கையில் இறங்கினால் சிறுபிள்ளையின் நிலை. இப்படி இருபது ஆண்டுகள் எண்ணற்ற வாலிபர்களின் கண்களுக்குக் காட்சியாய்த் தோழனாய் இருந்து வந்தவர் ஆசிரியர் வரதராஜன்.

## பரமன் கோபிக்கமாட்டார்

இத் தமிழ் நாட்டிலுள்ள இந்து மதக் கோயில்களில் உள்ள கடவுள் வடிவங்கள் மீது நாள்தோறும் பெய்யப் படும் பால், எத்தனையோ ஆயிரக் கணக்கான ஏழைக் குழந்தைகளின் பசியைப் போக்கக் கூடியதாகும். குடக் கணக்கிலே கோயில்களிலுள்ள வடிவங்கள் மீது கொட்டிப் பாழாக்கும் பாலைப் பசியால் வாடும் பச்சிளங் குழந்தை களுக்குக் கொடுப்பதால், 'பரமன்' ஒருபோதும் பதறிக் கோபிக்கமாட்டார்.

## போர் எச்சரிக்கை

போரினால் ஏற்பட்ட புண் ஆறு முன்பே, இரத்த வெள்ளம் பாய்ந்தோடிய இடங்களிலே கறை போகா முன்பே, பிணவாடை அடியோடு ஒழியா முன்பே, நசித்த தொழில்கள் மீண்டும் தலையெடுத்துப் பழைய நிலையைப் பெறுவதற்கு முன்பே, பொருளாதாரச் சீர்குலைவு சரிப் படுத்தப்படாத முன்பே, இடிந்த கட்டடங்கள் புதுப் பிக்கப்படுவதற்குள்ளாகவே, பாழான வயல்களிலே மீண்டும் பயிர் ஏறு முன்பே, மற்றோர் போர் மூண்டுவிடக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகப் பல நாடுகளிலேயும்

உள்ள தலைவர்கள் எச்சரிக்கை விடுக்கத் தொடங்கி விட்டார்கள்.

## போர் வெறியரும்—மக்கள் ஆதரவும்

அழிவதற்கு முன் தினம் வரையிலே அடால்ஃப் ஹிட்லருக்கு அதே நிலைதான் இருந்தது. கருத்தில் வெறி ஏறிக் கிடந்த ஜெர்மன் காளைகளுக்குப் பெர்லின் பித்தன், கண்கண்ட கடவுளாகவே இருந்து வந்தான்.

முசோலினிக்கும், இத்தாலிய நாட்டு மக்களின் பேராதரவு இருந்தது. பழங்கதை ஏன்! இதோ இன்று ஆப்பிரிக்காவிலே டாக்டர் மலானுக்கு, மிக மிகச் செல்வாக்கு. தங்களின் உயர்வுக்கு உழைக்கும் உத்தமர் மலான் என்றே வெள்ளை ஆப்பிரிக்க மக்கள் எண்ணுகிறார்கள். ஆனால் உலக மன்றத்திலே, நீதி நேர்மையை மதிப்பவா முன்பு அறநெறி அறிந்துரைப்போரின் அவையிலே, அடால்ஃப் ஹிட்லர், இத்தாலிய இரும்பு உள்ளத்தான், செல்வாக்குப் பெற்ற மலான், ஸ்பானிய—சர்வாதிகாரி ஃபிராங்கோ ஆகியோர் கொடியவர்கள் என்றும், கோணல் நடையினரென்றும், வெறியரென்றும், மக்களின் உரிமையைச் சூறையாடும் துஷ்டர்களென்றும் கூறப்படுகிறதே ஒழிய, அவர்கள் தத்தமது நாட்டவரின் ஆதரவை அளவற்ற முறையிலே பெற்றவர்கள்; ஆகவே, அவர்களின் செயல், சீலமுடைத்து; போக்கு—புனிதம் நிறைந்தது; அவர்களை மாநிலம் மதித்திட வேண்டும் என்று எவரும் கூறவில்லை.

## மாற்றாரை என்ன செய்ய முடிந்தது?

தார்த்தாரி தேசத்துப் புரவிகள் மீதமர்ந்து, தகதக வென்னக் கவசம் பூண்டு, பளபளக்கும் கட்கம் ஏந்தி, போர்க்குணம் படைத்த மக்கள் இங்குப் புயலெனப் புகுந்த போது, காய்ந்த புல்லைக் கையிலே பிடித்துக்கொண்டு இருந்த கூட்டம் என்ன செய்ய முடிந்தது? சாம்ராஜ்யங்கள் சாய்ந்தன! அரசுகள் கவிழ்ந்தன! வீரர்களின் குருதி மண்ணில் குழைந்தது! கட்டிய கோட்டைகள் தூளாகி, வெட்டிய அகழிகள் தூர்ந்து, வேந்தர்கள் முடியிழந்தனர். அப்போதெல்லாம் வேதமோதிகள் செய்ததென்ன? வேள்விக் குண்டங்களிலே இருந்து கிளம்பிய ஜ்வாலை மாற்றாரை என்ன செய்ய முடிந்தது?

## தேவ கட்டளையா?

உத்தமர் காந்தியார் உயிர் எந்த மத ஜாதீய வெறியால் பறிபோயிற்றோ, எந்த ஜாதிச் சனியன் டச்சுக்காரனையும், பிரெஞ்சுக்காரனையும், போர்ச்சுக்கல் நாட்டவனையும், பிரிட்டிஷாரையும், இங்குக் குடிபுகுந்து கொடிகட்டி வாழச் செய்ததோ? எந்த ஜாதி பேதத்தால், சமுதாயம் சின்னாபின்னமாகி, மக்கள் மனத்திலே மாச்சரியம் மூண்டதோ? எந்த ஜாதிச் சனியனைக் கண்டித்து விவேகானந்தரும், இராமலிங்கரும், ராஜாராம்மோகனராயும், பிறரும் பேசியும் போரிட்டும் சாய்ந்தனரோ? எந்த ஜாதிக் கொடுமையால், கிராமங்கள் கொடுமைக் கூடங்களாகவும், நகரங்கள் நயவஞ்சகச் சாலைகளாகவும்

மாறிற்றே? எந்த ஜாதிச்சனியனால், கோயிலைக் கட்டியவரும் குளத்தை வெட்டியவரும் கட்டிய கோயிலில் நுழையவோ, வெட்டிய குளத்தில் குளிக்கவோ உரிமை பெற முடியாது போயினரோ? எந்த ஜாதி வெறி, மக்களுக்கு மிருக உணர்ச்சியை வளர்த்து நாட்டிலே காட்டுப்போக்கை உண்டாக்கி வைத்ததோ? அந்த ஜாதி முறை இருக்கத்தானே வேண்டும்; அது தேவ கட்டளை என்று பேசினர் பார்ப்பனர்கள்.

## உழவர் நிலையைப் பொறுத்தது ஊர் நிலை

விழாவுக்கு உதவியவர் உழவர்; அவர்தம் நிலையை மறத்தலாகாது. உழவர் உள்ளம் எந்நிலையோ, அந்நிலையே ஊர்நிலை இருக்கும்—ஊராள்வோரின் நிலையுமிருக்கும். உழவுத் தொழிலுக்கு, நாட்டு மக்கள் நன்மதிப்புத் தருவதே **தமிழ்த்திருநாளின்** முக்கியமான நோக்கமாக அமைதல் வேண்டும். வேலி இரண்டாயிரங்கொண்ட நிலவேந்தர்கள் ஓர் புறமும், ஒட்டிய வயிறுடன், கட்டிய கந்தையைக் கசக்கிப்போட்டுவிட்டுக் கையால் மெய்யைப் போர்த்துக் கொண்டுள்ள உழவர் மற்றோர் புறமும் இருப்பது நாட்டுக்கு நல்லதல்ல.

## வைதீக மூடுபனியைச் சிதறடித்த வீரன்

வால்டேர் போர்வீரனல்லன்; ஆனால், பொறுத்துப் பொறுத்துத் தன்மான உணர்வு மரத்துப் போகும்

நிலையிலே இருந்த மக்களைத் தட்டி எழுப்பிய புரட்சிக்காரன்! பகுத்தறிவுத் தந்தை! பாமரரின் சக்தியை அவர்கள் உணரும்படி செய்த சிந்தனைச் சிற்பி! பேனா முனைகொண்டு, அரண்மனைகளை, அஞ்ஞானிகளின் இருப்பிடங்களை, பழமையின் கோட்டைகளைத் தாக்கிய வீரன்! கேலியால், கண்டனத்தால், ஆராய்ச்சியால், அறிவுரையால், வைதீக மூடுபனியைச் சிதறடித்த புது உலகத் தூதன் வால்டேர்.

வீரரின் வாளை விலைக்கு வாங்க முடிந்தது; எதிர்த்து ஒடிக்க முடிந்தது; வஞ்சித்து வளைக்க முடிந்தது. ஆனால் வால்டேரின் பேனாவை—அடக்குமுறை, சிறை, நாடு கடத்தல் எனும் எவற்றாலும் வளைக்க முடியவில்லை.

## அறிவுமணங் கமழும்

எரிமலையும், சுடுமணலும்; நெடுங்காடும், பெருவெள்ளமும், வறண்ட நிலமும், வளமற்ற நீர் நிலையமும் படைத்த இடமாக இன்றி, நன்செயும் புன்செயும், நடுநடுவே நறுமணப் பூங்காவும், பழமுதிர்சோலையும், பாங்குடன் விளங்கும் குன்றும், மலையும், மலைபடுபொருளும், மக்களின் தேவைக்கேற்றவைகளை நல்கும் கனிகளும், சிந்து பாடும் சிற்றாறும், வள்ளல்போல் தரும் ஆறுகளும், பிறவுங் கொண்டு பொன்னாடாக விளங்கும் இந்நாடு நந்நாடு என்று கூறிக்கொள்வதிலே ஓர் பூரிப்பும் பெருமையும் நமக்கிருப்பது இயல்பே; இருந்தாலும் அவசியமே. ஆனால்,

இத்தகைய நாட்டிலேயுள்ள நலிவுகளையும் நாம் மறுத்தலாகாது. தீட்டிய வைரம்போல் தணலில் வெந்து, கைத்திறனால் உயிர்பெறும் தங்கம்போல், அரைத்தெடுத்த சந்தனம் போல் நலிவு நீக்கப்பெற்று, அயர்வு போக்கப்பெற்று, ஆற்றல் வளப்படுத்தப்பெற்ற நாடும் அழகுடன் விளங்கும். ஆங்கு அறிவு மணங்கமழும்; இன்பவிழா என்றென்றும் இருக்கும்.

## வேங்கைக் காட்டை நரி யாள்கிறது

"வலியோர் எளியோரை வதைபுரிவதா, இதனை ஒழிக்கக் கொலை வாளை எடடா" என்று கூறுகிறார் கவி. இங்கோ! வலிவற்றவர் வலிவுள்ளவரை வதை புரிகிறார். வீரரைக் கோழைகள் ஆட்சி புரிகிறார்கள். புல்லாயுதம் வாளாயுதத்தை அடக்குகிறது. வலியோர் எளியோரை வாட்டுவது கண்டு, ஆரியர் தமிழரை அடிமை கொண்டுள்ளனர்! கொலைவாள் கொலைவாள்என்று உரிமைப்போரின் உத்வேகம் உரைக்கும் கவிஞர், எளியார் வலியோரை வாட்டும் இந்த விசித்திரத்தைக் கேட்டால்—வேங்கைக் காட்டிலே நரியாளும் இந்த விந்தையை—வீரரை வீணர் வீழ்த்தும் இந்த விபரீதத்தைக் கேட்டால் என்ன கூறுவார்? எண்ணுங்கள்! எண்ணி ஏங்காதீர்; ஏக்கத்தோடு தூங்கிக் கிடக்காதீர். கண்களிலே நீர் தளும்பினால் துடைத்திட நின்று தாமதம் செய்யாமல் துரிதமாக வாரீர்! விபரீதம் முற்றுமுன், இனம் அழியுமுன், நாடு காடாகுமுன், இதுவே தருணம்

## ஏழையின் செல்வமே மாதவன் மகுடமுடி

பக்தர்கள் அறிய மாட்டார்கள், தன் வாழ்வுக்கு வழி செய்யும் வள்ளலைக் கண்டதும் ஏழையின் முகத்திலே மின்னல் வேகத்திலே தோன்றிடும் ஆனந்த ஒளியை! மரணப் படுக்கையிலே கணவன்! மாரடித்தழுகிறாள் மனைவி! குடித்துவிட்டுக் கூத்தாடுகிறான் மகன்! "மருந்துண்டு பணம் தேவை" என்று கூறுகிறார் மருத்துவர்; கையிலோ காசு இல்லை, கடன் பெற ஒரு வழியும் தெரியவில்லை. யாரிடம் சென்று கெஞ்சினாலும் கூறப்படும் பதிலோ, "போ! இதென்ன தொல்லை?" என்பதுதான். இந்த நிலைமையிலே தந்து பாருங்கள் அந்த அம்மைக்குப் பணம்!

எதிர்பாராத உதவி பெற்றதும், அந்த அம்மையின் கண்களிலே கூத்தாடும் திருப்தியின் திரு உருவான ஒளியைக் காணுங்கள். மகுடத்திலே புதைக்கப்பட்டுள்ள கல் கக்கும் ஒளி, மங்கலாகத்தான் தெரியும், அந்த மாதின் விழி விடு ஒளிமுன்! நிம்மதியான வாழ்வு கிடைக்கப்பெற்ற குடும்பத்திலே காணப்படும் களிப்பின் ஒளிக்குத் துளியும் ஈடாகாது—அந்த வைர முடியின் ஒளி! ஆனால் அத்தகைய நிம்மதி, திருப்தி, களிப்பு, வாழ்க்கை ஒளி இல்லாத இல்லங்கள்தானே அநேகம். ஈரமற்ற நெஞ்சினர், இறுமாந்த இயல்பினர், இல்லாதாரைக் கொல்லாதது ஒன்றுதான் குறையே தவிர, மற்றெல்லாக் கொடுமைகளையும் செய்துதானே வருகிறார்கள். அந்தக் குன்றிக் கிடக்கும் குமுறும் நெஞ்சத்தினர், பசித்த உள்ளத்தினர்,

குழிவிழுந்த கன்னத்தினர், எலும்புருவத்தினர், ஏக்கமுற்ற வாழ்வினர், குடிசைகளிலே குற்றுயிராகக் கிடக்கும் போது; ஏழை இனம் எலும்பு முறியப் பாடுபட்டு வளரச் செய்த செல்வம், இங்கே மலைமேலுள்ள மாதவன் தலையிலே மகுடமாகிவிட்டது. அங்கே இருள் சூழ்ந்து இடர் மிகுந்து, கோடிக் கணக்கிலே மக்கள் கோவெனக் கதறவும், சக்தியற்றுக் கிடக்கவும், இங்கே இறைவனின் சிரத்திலே ஏறிக் கொண்டிருக்கும் எரி நட்சத்திரங்கள், எத்தருக்கு இரையாகும் அத்தகைய ஏமாளிகளும் உள்ளனரே என்று கூறிச் சிரிக்கின்றன. கலம் கவிழுமோ என்று கலக்கம். அந்தச் சமயத்திலே அலை மலைபோலக் கிளம்பி, மடிந்து மடிந்து மணலைத் தழுவும் காட்சி கண்டு களிப்பவன் கலத்திலே இருப்பின், அவனை எந்த இனத்திலே சேர்ப்பது! அது போலன்றோ இருக்கும் ஏழை மக்களின் வாழ்க்கையிலே—எரிமலை கக்கும் நெருப்பென--இல்லாமை, போதாமை, கிடைக்காமை எனும் கொடுமைகள் புகுந்தழிக்கும் நேரத்தில், இவ்வளவு ஏழை மக்களின் உழைப்பால் உயர்ந்தவர்கள், இகத்தின் இன்பமட்டுமென்ன, தமக்குள்ள செல்வத்தால் பரத்தின் பாகுரசமும், விலைக்குப் பெற முடியும் என்ற மமதையின் மத மார்க்கெட்டிலே—தலங்கள் என்ற தரகுக்கடை சென்று காணிக்கை எனும் விலை தந்து அருள் எனும் சரக்குப் பெறுவதும், அந்த அருள் நாடிகளின் பணத்தால் அழகான வைரமுடி தயாராவதும், அது ஆண்டவனின் சிரத்துக்கு அணியாகி ஒளி வீசிடச் செய்வதும், அதைக் கண்டு அன்பர்

கூட்டம் ஆனந்தமடைவதுமான காட்சி இருக்கிறது. துள்ளி விளையாடும் புள்ளிமானைக் கொன்றன்றோ தோல் தயாரிக்கப்படுகிறது என்று எண்ணுமல், மான் தோல் பூஜா காரியத்துக்கேற்றது; புனிதவானுக்கு உகந்தது என்று கூறிடும் மக்களன்றோ இங்குளார்! அவர்கள் முடியின் ஒளி கண்டு பக்தி முழக்கமிடுவதிலே ஆச்சரியம் இல்லை! வைரத்தால் முடி அவருக்கு! அவருடைய அடியார் களுக்குக் கற்றுக் கொடுக்கப்படும் மொழியோ, "காயம் பொய்! காற்றடைந்த பை! பிறந்தார் இறப்பர் முடிவிலே! யாவும் ஒரு பிடி சாம்பர்!" என்பதாகும். எவ்வளவு குருட்டுக் கொள்கை! எத்தகைய இருட்டு அறை! மதியை மருட்டும் சிறை!

## பஞ்சாங்கம் பார்க்கும் புத்தி

பஞ்சாங்கமில்லாத வீடுகளை நீங்கள் காணமுடியாது. நாள் பார்க்காத மக்களை நீங்கள் பார்க்க முடியாது.

சகுனம் பார்க்காத ஜன்மங்களை நீங்கள் காண்பது அரிது. மார்கழித் திருநாள் கொண்டாடாத மக்கள் மிக மிகக் குறைவு. சித்ரா பௌர்ணமிக்குப் பொங்கலிட்டுப் படைக்காத வீடுகளைப் பார்க்க முடியாது.

பஞ்சாங்கம் பார்க்கும் பழைய புத்தி அடியோடு ஒழிந்தாலொழிய, மக்கள் பகுத்தறிவைப் பெற முடியாது.

## தோழமையா? பகைமையா?

விந்திய மலையிலிருந்து குமரிவரை எந்தக் காலத்திலும் வடநாட்டார் ஆதிக்கம் செலுத்தியதில்லை. சந்திரகுப்தன் காலத்திலும் இல்லை. கனிஷ்கன் காலத்திலும் இல்லை. அவுரங்கசீப்பால்கூட விந்தியமலைக்கு இப்பால் வரமுடியவில்லை! இவர்கள் ஆண்டதெல்லாம் விந்திய மலைக்கு அப்பால்தான். படையெடுப்புக்களும் அப்படியே. அவைகளும் முறியடிக்கப்பட்டிருக்கின்றன. தசாவதாரம் என்றால் உங்களுக்கு நன்கு தெரியும். தசாவதாரத்திலே இரண்டே இரண்டு அவதாரங்கள்தான் மனித அவதாரம் எடுத்தது. அந்த இரண்டு அவதாரங்களும்கூட விந்திய மலைக்கு அப்பால்தான் எடுத்தன. தமிழர்களுக்கு இரண்டு தான் தெரியும். ஒன்று **தோழமை;** மற்றொன்று **பகைமை.** இவை இரண்டும் தவிர தமிழர்களுக்கு வேறொன்றும் தெரியாது. ஆனால் தமிழகத்தைத் தாக்கிப் பேசிய வடநாட்டாரைத் தமிழர்கள்தான் பணியச் செய்திருக்கிறார்கள்.

## வாழ்க்கை இன்பம்

வீணையிலிருந்து நாதம் பிறக்கும். மலரிலிருந்து மணம் தோன்றும்; காதலிலிருந்தோ எல்லாம் தோன்றுமல்லவா?

மலர் இருப்பது மணம் நுகர, கனியிருப்பது ரசம் பருக, வாழ்க்கையிருப்பது இன்பக் கேணியில் குளிக்க.

## ஆன்ருேர் என்ற சாக்கு

உருவமற்றவனுக்கு உருவமைப்பதும் உலக ரட்சகனுக்குப் பட்சணமிடுவேன் என்ற பிச்சுப்பிள்ளை விளையாட்டில் ஈடுபடுவதும், அறிவு வளர்ச்சிக்கு அறிகுறியாகாது. ஆன்ருேர் வழிபட்டனர்; அடியேனும் அவ்வண்ணமே என்றுரைப்பது விஷய விளக்கமுமல்ல; வாத முறையுமல்ல! ஆன்ருேர், ஆன்ருேர் என்று உச்சத்தைத் தேடிப் பார்ப்போமானல், உச்சிக்கிளையிலே உட்கார்ந்து கொண்டு, மச்சுமீது உலாவுவோரைக் கண்டு சேட்டை புரியும் குரங்கினிடம் போய்ச் சேரவேண்டி நேரிடும்.

மனிதனுக்கு ஆதித்தந்தை (மூலவர்), குரங்கு என்பது டார்வின் தத்துவம். எவரும் அந்நிலைபெற நினையார்! எனவே, ஆன்ருேர் என்ற சாக்கு மொழியை விட்டு, அறிவு எனும் மெய்ந்நெறி நின்று—மேதினியின் மற்றப் பாகங்கள் எவ்வளவோ முன்னேறியிருக்க, இங்குமட்டும் மடமை மதமாகவும், சேட்டை சடங்காகவும், பாதகர் புரோகிதராகவும், வேடம் வைதீகமாகவும் இருப்பது சரியா? முறையா? அழகா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டுகிருேம்.

## விஞ்ஞானத்தின் மூலம் மழை

மழை பொழிகிறது! மாதரசிகள் கற்பின் திறத்திலல்ல—அது நமது நாட்டிலே பாட்டிலே உள்ளது.

பெய்யெனப் பெய்யும் மழை என்பது பாட்டளவோடு இன்றிப் பரீட்சித்துப் பார்க்குமளவு பக்குவம் பெற்று விட்டது. மதவாதிகளில் நேர்மையானவர்களை மட்டும் குறிப்பிடுகிறோம்—வெட்கப்படும்படி — விஞ்ஞானத்தைத் துணைக்கழைத்து மழையைப் பொழியச்செய்து காட்டினவர், மகான்களல்லர்; மகாசாமான்யர்கள்; அருள் பெற்றவர்களல்லர்; அறிஞர்கள்!

இப்போது முட்டையிலிருந்து 'குஞ்சு' அடை காத்திடாமல் விஞ்ஞான முறையினாலே வெளியே கொண்டுவரப்படுகிறது. அதுபோல மேகம் தானாகக் கனிந்து மழையைப் பொழிவதற்குப் பதிலாக, மேகத்தைக் கனியச்செய்து மழையைப் பொழியச் செய்கிறார்கள்—ரமண ரிஷியா? அல்லர்! அரவிந்தரா? அல்லர்! ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள். மேகமண்டலத்துக்கு விமான மூலம் சென்று கட்டி கட்டியாகக் கெட்டியான பனித்துண்டுகளை வீச, அந்தப் பனித்துண்டுகளின் தாக்குதலால், மழையைச் சுமந்துகொண்டு செல்லும் மேகக்கூட்டங்கள் தளர்ந்து மழையைப் பொழிகின்றன.

## பாலாபிஷேகமும் பல நோய்க் கிருமிகளும்

கடவுள் வடிவங்கள்மீது ஊற்றப்படும் பாலை அவ்வடிவங்களாவது ஏற்றுக்கொள்ளுகின்றனவா என்று பார்த்தால் அதுவும் இல்லையே! கடைசியாக அந்தப் பால் முழுவதும் சாக்கடை வழியாக வெளிப்பட்டுத் துர்நாற்றத்தைத்

தருவதுமன்றி, அத் துர்நாற்றம் பல துஷ்டக் கிருமிகள் உற்பத்தியாவதற்கும், அக் கிருமிகளால் பலவிதமான தொற்று நோய்கள் உண்டாகி மக்களின் உயிரை மாய்ப்பதற்குமே காரணமாகின்றது.

## பிறப்பினால் பேதம் காட்டுவதா?

நிறம் வேறாக இருக்கும் காரணத்திற்காக, வேற்றுமை காட்டி நியாயம் பேசுவது எவ்வளவு அக்கிரமமோ, அதைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அநீதியானது, பிறப்பினால் பேதம் காட்டி மக்களை மாக்களாக நடத்துவது.

## மே தினம் பூத்தது

வளமையினருகே வறுமை; பலத்தினருகே பயம்: இவை ஏன்? இந்தக் கேள்வி சாதாரண மக்களையல்ல; கருத்துலகின் காவலர்களாக விளங்கியவர்களனைவரையும் கதிகலங்க அடித்தது. கி. மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த பிளேட்டோ என்னும் கிரேக்க தத்துவ ஞானியின் காலத்திலிருந்து, கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மார்க்ஸ் காலத்திற்கு முன்பு வரை, 'மக்களின் நல் வாழ்வுக்கான' ஆராய்ச்சிகளனைத்தும் அறிவுக்குப் பொருத்தமான முடிவை அளிக்கவில்லை. ஆண்டை— அடிமை, உயர்ந்தவன்—தாழ்ந்தவன், மதகுரு—பக்தன், மிராசு—உழவன், பிரபு—பணியாள், முதலாளி—தொழிலாளி இவர்களிடையே ஏற்பட்ட போராட்டங்களின்

வரலாற்றை நன்ருக அலசிப்பார்த்தவர் மார்க்ஸ். பிரபுக்கள்—முதலாளிகளின் கொடுங்கோன்மை வெகு நாளைக்கு நிலைக்காதென்பதையும், உழைப்பாளிகளின் முயற்சியால்தான், உழைப்பாளர் உலகு மலரும் என்பதையும் அவர் எடுத்துக் காட்டினுர். அவருடைய தெளிந்த முடிவு ஒடுக்கப்பட்ட உழைபபாளர்களை ஒன்று சேர்த்தது; நலிவுற்ற உள்ளத்தைப் புலியுளமாக்கியது. கசங்கிய கண்கள் கனலைக் கக்கின. மேநினி விழித்தது மே தினம் பூத்தது.

## அஞ்சாத ஏழைபங்காளர் அரங்கசாமியார்

சிங்கத்தைக் கண்டு சிறுநரி மறைந்தொளியலாம். ஆனல் சிங்கத்தைச் சிங்கமே கண்டு அஞ்சுவதென்ருல், அச்சுறுத்தும் சிங்கத்தின் ஆற்றல் பெரிதென்றுதான் கூற வேண்டும். அத்தகைய நெஞ்சுரமும், உடல் வன்மையும், கொள்கையிலே பற்றுங்கொண்டு வாழ்ந்தவர் மு. அரங்கசாமி அவர்கள்.

காஞ்சீபுரத்தைப பொறுத்த வரையில் சுயமரியாதை இயக்கத்தை நிறுவினவர் அவரேயாகும். இது பதினைந்து ஆண்டுகட்டு முன்பே நிகழ்ந்தது. கூட்டத்தில் கூடி இருப்பவர்களிலும், மறைவிலிருந்து கல் வீசுபவர்களும், வாய்விட்டுக் கண்டபடி ஏசுபவர்களுமே அதிகம். அக்காலத்தில் பரந்த நெற்றியில் பளிச்செனத் தீட்டிய நாமத்துடன் சில இளைஞர்களின் அரிய பெரிய முயற்சியை ஆக்கம் தந்து ஊக்கியவர் அவர்!

கிழிந்த ஆடை, பளபளப்பான உடை. இவை இரண்டிற்கும் அவர் வேற்றுமை அறியாதவர். ஏழை பங்காளராகவே அவர் வாழ்ந்தார். பணமூட்டைகளைக் கண்டு பல்லிளிக்கும் பண்பு அவரிடத்தில் ஒரு துளியும் கிடையாது. 'முடியாது' என ஒரு சொல் இருப்பதையே அவர் அறியார். 'அச்சம்' அவருக்குத் தெரியாத பண்பு.

மறந்தமிழர் மறைவு, பொது மக்கட்குப் பெருநஷ்டம். மலை சாய்ந்தது! என் செய்வது? இனிக் குன்றுகள் மலையாக வேண்டும்.

## இறந்தகால எதிர்காலக் கணக்கைப் பார்க்கும் மே நாள்

மறைந்தவரின் மாண்புகளை மறவாது பணிபுரிய வேண்டும். பல்வேறு பேதங்களின் காரணமாக ஏற்பட்ட வர்க்கப் போராட்டங்கள் இன்னும் தீர்ந்த பாடில்லை. பணப் பட்டாளத்திற்கும் பட்டினிப் பட்டாளத்திற்கும் மூண்ட மோதல் இன்னும் நிற்கவில்லை; போராட்டங்கள் பல கட்டங்களைத் தாண்டிக்கொண்டு வந்திருக்கின்றன; இன்னும் தாண்ட வேண்டிய கட்டங்கள் ஏராளமாக இருக்கின்றன. பாட்டாளிகள் போராட்ட முயற்சியின் இடையிலே ஓர் நாள் ஓய்வு பெற்று நின்று, சென்ற கால, வருங்காலக் கணக்கைப் பார்க்கும் திருநாளே மே நாள்.

சென்ற காலங்களில் மகத்தான வெற்றிகளைக் காண முடியாவிட்டாலும், கண்ட சிறு சிறு வெற்றிகளை நினைந்து

மகிழ்ந்து உள்ளத்தை ஊக்குவித்துக் கொள்ளவும், வருங் காலத்தில் ஆற்றவேண்டிய செயல்கள் குறித்து எண்ணிச் செயலாற்றும் நெறியிலே உறுதி கொள்ளவும் மே நாள் பயன்படுகிறது.

## தொழிலாளர் நல்வாழ்வே மே நாளின் குறிக்கோள்

திராவிடத்தைப் பொறுத்த மட்டில், குறிப்பாகத் தமிழ்நாட்டில், உழைப்பாளிகள் ஒன்றுகூடத் தடையா யிருக்கும் உயர்வு தாழ்வு முறைகளை அகற்றும் முயற்சி யிலும் திராவிடர் கழகம் ஈடுபட்டு வருகிறது. "சக்திக் கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி என்ற முறையை மனித சமுதாய வாழ்க்கைக்கேற்ற நிரந்தரத் திட்டமாக்க எடுத்துக்கொள்ளும் முயற்சி எளிதில் முடிவதாக அமைய வேண்டும். பொருளாதாரத் துறையில் அந்தக் குறிக் கோளை நோக்கித்தான் திராவிடர் கழகம் பணியாற்றி வருகிறது. அந்தக் குறிக்கோளை உறுதிப்படுத்திக் கொள்ளும் ஓர் ஒப்பற்ற நாளாகவே மே நாள் திராவிடர் கழகத்தினர்க்குப் பயன்படுகிறது.

"புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்" என்ற பெருமுழக்கம், உலகத் தொழிலாளர்களின் உள்ளங்களிலிருந்து இன்று வெளிக்கிளம்பட்டும்! அதனல் ஏற்படும் மகிழ்ச்சி எங்கும்

மலரட்டும்! அந்த மலரினின்றும் வீசும் இன்ப மணம் எங்கும் கமழட்டும்!

## வெந்ததைத் தின்று வந்ததைப் பேசித் திரிவதா?

கனிகுலுங்கா மரம், நீர் இல்லா ஆறு, பட்டுப் போன பயிர், கெட்டுப்போன குடும்பம், அணைந்த விளக்கு, சிதைந்த சித்திரம், நரம்பறுந்த யாழ், தொண்டை கம்மிய வித்துவான், பொருளில்லாப் பாட்டு இவை பரிதாப மூட்டுவன! வீராதி வீரர்கள் வெந்ததைத் தின்று மனத்தில் வந்ததைப் பேசிக்கொண்டு இருக்கும் நிலைமையும் அது போன்றதே.

## தமிழர்கள் எல்லாப் பண்பாலும் உயர்ந்தவர்கள்

பயிரில் களை போன பிறகு, உழவர் முகத்தில் தோன்றும் மகிழ்ச்சியைக் காண வேண்டுமா? கண் கெட்டதே என்று கவலைப்பட்டவனுக்கு மருத்துவர் உதவியால் மீண்டும் பார்வை விளக்கமானதும், அவன் எங்ஙனம் இருப்பான் என்பதை அறிந்துகொள்ள வேண்டுமா? பாய்ந்த வேலை வாங்கி எறிந்து, எதிரியை வீழ்த்தும்போது வெற்றி வீரனின் அகமும் முகமும் எங்ஙனம் இருந்திருக்கும் என்று தெரிந்துகொள்ள வேண்டுமா?

காதலித்தவளைக் கடிமணம் புரியும் வாய்ப்புக் கிடைக்கப்பெற்ற காளையின் களிப்பைக் காண வேண்டுமா? கார்கண்ட மயிலை, கதிரவனைக் கண்ட கமலத்தைக் காண வேண்டுமா?

இதோ தமிழர்களைக் காணுங்கள்; பிறப்பால் மட்டுமல்ல; உணர்வால், பண்பால் தமிழர்களாக உள்ளவரைக் காணுங்கள், இவ்வளவும் தெரியும்!

## திராவிடக் கழகப் பணியாற்றும் தீரர்களின் தியாகம்

திராவிட முன்னேற்றக் கழகத்திலே அமைதியே உருவானவர்கள்; குடும்ப சுகத்தைத் துறந்தவர்கள்; எதிர்ப்புக்கு மத்தியில் இருந்தே வளர்ந்தவர்கள்; பாலை வனத்தைப் பூங்கா ஆக்குவது போலப் பாழான வைதீகக் கோட்டைகளையெல்லாம் பகுத்தறிவுப் பாசறைகளாக்கிக் காட்டியவர்கள்; பணி புரியும்போது, சர்க்காரின் அடக்கு முறை சீறினால் சிரித்த முகத்துடன் அந்தத் தொல்லையை ஏற்றுக்கொள்ளும் உள்ள உரம் படைத்தவர்கள்—பெரியாரின் துதிபாடகர்களாக இருந்தால் மட்டும் போதாது; அவருடைய கொள்கைக்குப் பாதுகாவலராகவும் இருக்கவேண்டும் என்ற எண்ணங்கொண்டவர்கள்; பட்டம் பதவியை நாடாதவர்கள்; பராக்குக்காரராலும் பலதானம் கிடைக்குமோ என்ற சபலபுத்தி அற்றவர்கள்; கொள்கைக்காகப் பெரியார் திட்டம் தீட்டி வழிகாட்டிய போதெல்லாம் பூரிப்புடனும் பெருமையுடனும் அவர் சுட்டு

விரல் காட்டும் அவ்வழி செல்லத் துணிந்தவர்கள் ஆகியோர் உள்ளனர்.

## நம் விடுதலைக் கொலு மண்டபம்

விடுதலைக் கொலு மண்டபம் எப்படிக் கட்டப்படும்? அங்கு யார் கொலு வீற்றிருப்பர் என்ற கேள்வி எழுந்த போதெல்லாம், சுயராஜ்ய புவனத்திலே சுதந்தர தேவி கொலு வீற்றிருப்பாள்! என் அன்னை பராசக்தி பாரத மாதாவே அங்கு அரசுபுரிவாள்! என்று கூறக் காங்கிரஸ் கட்சி தயங்கினதில்லை. சித்திரம் தீட்டினோர் பலர்; சிந்து பாடினவர் அநேகர். நாம் விடுதலைக் கொலு மண்டபம் அமைக்க வேண்டும்; ஆனால் அந்த மண்டபம் மனமாச் சரியத்துக்கு உறைவிடமாகவும், சுயநலத்துக்குப் பீடமாக வும், இனப்போர்க் காடாகவும் அமைதல் கூடாது என்பதையே வற்புறுத்தி வந்திருக்கிறோம்.

## சர். தியாகராயர் மா வீரர்

சர் தியாகராயர் தோன்றித் திராவிடப் பெருங்குடி மக்கட்குத் தலைமை பூண்டு அவர்களின் தன்னுணர்வுக்கு வழிகோலி அவர்களின் வாழ்வில் இருந்துவந்த அடிமைத் தனத்தை அகற்றப் பாடுபட்டுச் சமுதாயத் துறை பொருளாதாரத் துறை, அரசியல் துறை ஆகியவற்றில் அவர்கள் இடம் பெற உழைத்த சரிதம் திராவிட

நாட்டின் மறு மலர்ச்சி என்போம். புத்துயிர் அளித்த பூமான் அவர்; நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம்; இங்கு நாம் அடிமைகளாக வாழ்வது அடாது என்பதை உணர்ந்தோம். நமது பண்டைப் பெருமைகளையும் அவரால் உணர முடிந்தது.

வாடிய பயிருக்கு வந்த மழைத்துளிபோல, அலுத்த உடல்மீது இனிய தென்றல்போலக் கொல்லும் காசத்தைக் கருவறுக்கும் மருந்துபோலத் தேய்ந்து வந்த திராவிடருக்குத் தேறுதல் கூறி, ஆறுதல் அளித்து, அவர்களின் புத்துணர்வு களுக்குக் காரணமாகக் காட்சியளித்தார் நம் மாவீரர் தியாகராயர்.

## திராவிடக் கழகம் இலட்சியம் உயர்வானது

தென்னாட்டைப் பொறுத்த மட்டில், மக்கள் வாழ்வின் கேடுகளையும் ஒரே இலட்சியத்தைக் கொண்டு திராவிட இயக்கத்தாராகிய நாம் பணியாற்றி வருகிறோம். நமது பணி அரசியல் வேட்டையல்ல; சந்தர்ப்பக் காற்றுமல்ல. நாம் நிலையான தென்றல்; உலராத ஊற்று. குறையாத குன்றம்—நமது பணி!

# அண்ணாவின் நகைச்சுவை

★

அன்புப் பழம்நீ

# அண்ணாவின்

# நகைச்சுவை

## நாட்டில்

சட்டையில்லாத சங்கரன், வேட்டியில்லாத வேலன், புடவையில்லாத பொம்மி, சோப் கிடைக்காத சொக்கி, செருப்பு வாங்க முடியாத சிங்காரம்—நாட்டில் அதிகமாக இருக்கிறார்கள்.

## ஆயிரம் ஆயிரம் கடவுள்கள்

இந்த நாட்டில் நல்லதங்காள் என்ற பெண் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அவள் பச்சை மட்டையை வைத்து நெருப்பு எரித்தாள் என்றும் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட பத்தினிதான், தனது நாட்டில் பன்னிரண்டு வருடம் வரையில் மழையில்லாததால் பட்டினியாகத் தனது குழந்தைகளைக் கிணற்றில் போட்டுத் தானும் மாண்டதாகச் சொல்லப்படுகிறது. பச்சைப்பட்டையில் நெருப்பு எரித்த பத்தினி, இந்த நாட்டின் மழையில்லாமையையும்

போக்கி இருக்கலாமே! அப்பொழுதெல்லாம் நாஸ்திகம் பரவவில்லையே. ஏன் அந்தப் பத்தினியார் மழையைப் பொழியும்படி செய்யவில்லை?

## கடவுள்கள் சும்மா இருந்தார்களா?

நான்கு வேதங்களும் நேரம் தவறாமல் ஓதப்பட்ட காலத்தில்தானே இந்த நாட்டை அன்னியர்கள் பிடித்தனர். ஆயிரமாயிரம் கடவுள்கள் இங்குத்தானே தோன்றியிருக்கின்றனர்; மிருதங்கம் கொட்ட நந்தியும், நடனமாட ஊர்வசியும் ஆக, இப்படிக் கடவுள்கள் இருந்த காலத்தில் தானே ஆங்கிலேயன் இந்த நாட்டைப் பிடித்தான். ஒன்று இந்தக் கடவுள்கள் திறமையற்றவர்களாக இருக்க வேண்டும்; அல்லது ஆங்கிலேயனிடம் ஏதாவது லஞ்சம் பெற்றுக் கொண்டு சும்மா இருந்திருக்க வேண்டும்.

## சிரிப்பு

கண் இருந்தும் குழியில் விழ வேகமாகச் செல்பவனைக் கண்டால், கைகொட்டிச் சிரிக்க மாட்டோமா? கனியிருக்கக் காயைத் தேடித் திரிபவனைக் கண்டு கேலி பேசாதிருப்போமோ? வெண்ணெயை ஒருவன் பறித்துக்கொண்டு போக இடங் கொடுத்துவிட்டு, நெய் தரும்படி வேறோர்

இடத்திலே நின்று கெஞ்சுபவனைக் கண்டால் சிரிப்பு வராமலிருக்குமா?

விழுப்புரம் ஜங்ஷனிலிருந்துகொண்டு பாண்டிக்குப் போகிறவன் வழி பார்ப்பது போலவும், திருச்சி ஜங்ஷனிலுள்ளவன், மதராசுக்குப் போவதற்கு வழி பார்ப்பது போலவும், மக்கள் பிறந்தவுடனேயே அண்ணாந்து மேலே பார்த்துக்கொண்டு 'அப்பா! இதை விட்டு எப்போது அந்த லோகத்திற்கு வருவேன்' என்று இந்த லோகத்தை ஒரு ஜங்ஷனாக்கிவிட்டார்கள்.

## அவர்கள் வாழ்கிறார்கள்

'மாயம்' எந்த அளவுக்கு மயக்கத்தை மக்களிடையே உண்டாக்கிற்று என்றால், நாற்பது வயது ஆளைப் பார்த்து, 'என்ன சௌக்கியமா யிருக்கிறீர்களா?' என்றால், 'சௌக்கியமாயிருக்கிறேன்' என்று சொல்லமாட்டான். 'ஏதோ இருக்கிறேன்' என்று மேல் ஸ்தாயி இறங்கிக் கீழ் ஸ்தாயியிலே சொல்லுவான். சொல்லுவதிலே சுரங் குறைந்திருக்குமென்பதோடு மட்டுமல்ல; பேச்சுடன் பெருமூச்சும் கலந்து வரும். அந்தக் கலப்பு—கேட்டவனுக்கே பயத்தையும் கவலையையும் உண்டாக்கிவிடும்! 'நன்றாயிருக்கிறேன்' என்று சொன்னால் என்ன? மேல் நாடுகளிலே ஆங்கிலத்திலே ஹௌ டு யுடு ("How do you do") என்றால், உடனே ஓ. கே. (O. K) நன்றாயிருக்கிறேன்

என்று சொல்லுவார்கள். அதனுல்தான் அவர்கள் வாழ்கிறுர்கள்; நாம் ஏதோ இருக்கிறேம்.

## தமிழர்களுக்குப் பர்ணசாலே வேண்டாம்

தமிழர்களுக்கு ஒரு வீசை இரும்பு; ஓர் சிறிய உலேக் கூடம்; கொஞ்சம் மூளே இவை இருந்தால் போதும் வாள் வடிக்க. வாள் வடித்து விட்டார்களானுல், அவர்களுக்கு முன்னமேயே இருக்கின்ற அஞ்சா நெஞ்சமும், அருமைக் கையும் போதும். பர்ணசாலேகள் அமைக்க வேண்டிய தில்லே ஐயனின் அருளேப் பெற; எப்பொழுது அம்மையும் அப்பனும் சண்டை சச்சரவுகளில்லாம லிருக்கிறுர்கள் என்று நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய தில்லே!

## ஒலி ஆராய்ச்சி அங்கும்

சந்திர மண்டலத்திலே ஏற்படும் ஒலியைக் கண் டறிந்து, இங்கு ஒலிக்கும்படி செய்யும் விஞ்ஞானக் கருவி யின் வெற்றியால், சென்ற கிழமை அரைமணி நேரம் சந்திரமண்டலத்தின் ஒலி எதிரொலித்து ஆராய்ச்சி நடை பெற்றது.

## ஒலி ஆராய்ச்சி இங்கும்

தீபாவளிப் பண்டிகைகளுக்காகப் பட்டாசுக் கட்டுகள் வெடித்த ஒலி, இங்கு, புராணங்களின் துணேயால்; சென்ற கிழமை, பழமை விரும்பிகளின்

மனம் குளிருமளவுக்குக் கேட்டது. 'நரகாசுர வதை' பற்றிய புராணம் படிக்கப்பட்டது.

## காதற்ற ஊசி

பட்டினத்தடிகள் காலத்திலிருந்துதான் மாயா வாழ்வைப்பற்றி மக்கள் அதிகம் நினைக்க ஆரம்பித்தனர் 'காதற்ற ஊசியும் கடைவழிக்கு வாராது காண்' என்ற மாயா வாழ்க்கைத் தத்துவம், இன்றும் உலவுகிறது. நாடகங்களிலே இதை நீங்கள் எதிர்பார்க்கலாம். அங்கிருந்து அரசன் வருவான். அரசனைப் பார்த்து ஒருவன் கேட்பான்: 'இந்த அரண்மனை யாருக்குச் சொந்தம்? இந்த நந்தவனம் யாருக்குச் சொந்தம்? இரும்புப் பெட்டி யாருக்குச் சொந்தம்? இரும்புப் பெட்டியிலுள்ள இருபது லட்சம் யாருக்குச் சொந்தம்?' எனவும் அரசன், 'யாருக்கும் சொந்தமல்ல' என்று சொல்வான். உண்மையிலேயே அவன் இறந்த பிறகு அதை அவன் மகன் அனுபவிப்பான்; மகன் இல்லா விட்டால், அவனது வார்சுகளில் ஒருவன் அனுபவிப்பான். வார்சுமில்லா விட்டால், தர்ம கர்த்தாக்கள் அனுபவிப்பார்கள். இதை மக்கள் உணருவதில்லை. உணர அவர்கள் மனம் இடம் கொடுக்காது.

## திருமணம்

ஓர் தலைமகன் காட்டுக்கு வேட்டையாடச் செல்கிறான். தன் வேல் தைத்த யானை எப்பக்கம் ஓடிவிட்டது என்று தேடிக்கொண்டு வந்தவன் முன், ஓர் ஆரணங்கு எதிர்ப்

யடுகிறாள். நல்ல அழகி; பக்கத்திலே பளிங்கு நீரோடை. கட்டழகன் அந்த மங்கையை மணந்துகொள்ள இச்சைப் படுகிறான். மணந்துகொள்வதென்றால், இந்தக் காலத்தைப் போலப் பொருத்தம் பார்க்க ஐயரைத் தேடுவது தேவையில் லாதிருந்த காலம் அது. காதலரிருவரும் கண்களாற் பேசி ஞர்கள். வாய் அச்சுப் பதுமை போலிருந்தபோதிலும், அருகே சென்றான். வஞ்சி அஞ்சினாள். அஞ்சாதே; அஞ்சுகமே என்றான். ஆனால் சற்று நேரத்தில் ஓர் அலறல் கேட்டது. அது என்னவென்று கேட்கிறாள் அந்த ஏந்தி ழையாள். அது என் வேல் வலிக்குத் தாங்கமுடியாமல் பிளிறும் யானையின் குரல் என்கிறான். பாவைக்கு யானை என்றால் பயம் போலிருக்கிறது! 'ஐயோ, யானையா! அச்சமா யிருக்கிற'தென்றாள். அச்சமானால் அருகே வா! என்றான். வந்தாள்; அணைத்துக்கொண்டான்!! திருமணம் முற்றிற்று!!!

இந்த ஒரு சம்பவத்தைப் பிற்காலத்தில் வள்ளி கதை யாக்கி, அந்த வீரனை வேலனுக்கி, கிழவனுக்கி, தேனும் தினைமாவும் கேட்டான் என்று சொல்லி, வளையற்காரனுக்கி விட்டார்கள்.

## எண்ணிப்பார்...கோபியாமல்!

மேனுட்டான் கண்டுபிடித்துத் தந்த அச்சு யந்திரத்தின் உதவிகொண்டு, உன் பஞ்சாங்கத்தை அச்சடித்துப் படித்து, அகமகிழ்கிறாயே!

அவன் கண்டுபிடித்த ரயிலில் ஏறிக்கொண்டு உன் பழைய, அற்புதம் நடைபெற்ற திருத்தலம் போகிருயே!

அவன் கண்டுபிடித்துக் கொடுத்த ரேடியோவிலே, உன் பழைய பஜனையைப் பாடவைத்து மகிழ்கிருயே!!

ஒரு கணமாவது யோசித்தாயா? இவ்வளவு பூசைகள் செய்துவந்த நாம், நமது மக்கள், இதுவரை என்ன புதிய அதிசயப் பொருளைப்—பயனுள்ள பொருளைக் கண்டுபிடித்தோம்—உலகுக்குத் தந்தோம் என்று யோசித்துப்பாரப்பா! கோபப்படாதே! உண்மை அப்படித்தான்; கொஞ்சம் நெஞ்சை உறுத்தும். மிரளாமல் யோசி; உன்னையுமறியாமல் நீயே சிரிப்பாய்.

## இயற்கை

கடிகாரத்தைப் பார்த்து வேலை செய்துவிட்டுக் காலண்டரைப் பார்த்துச் சம்பளம் வாங்கும் படித்தவர்களுக்குக்கூட, இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவதில்லை. மிகக் கஷ்டப்பட்டு "நாலு நாள் லீவு" பெற்ருலும், குழந்தைக்கு மொட்டை அடிக்கத் திருப்பதிக்கோ, அம்மா சிரார்த்தத்துக்கு காவிரிக்கோ போய்வருவார்களே யொழிய, களிப்புக்காக, இயற்கை தீட்டிக் காட்டும் இனிய ஓவியங்களைக் காணச் செல்பவர் இரார்.

## இருவருக்கும் சந்தேகம்!

சார்! ஒரு சந்தேகம்

என்னடா?

சரஸ்வதி எங்கே இருக்கிறாள்?

வெண்டாமரையில்

அவள் இருக்கும் அப் பூ எங்கே இருக்கிறது சார்?

பிரம்மாவின் நாவில்

பிரம்மா எங்கே இருக்கிறார் சார்?

மஹாவிஷ்ணுவின் உந்தியில் (அதாவது தொப்புளில்)

மஹா விஷ்ணு எங்கே இருக்கிறார்?

ஆதிசேஷன் என்ற பாம்பின்மேல்

அப்பாம்பு எங்கே இருக்கிறது சார்?

அதுவா! திருப்பாற்கடலில்

திருப்பாற் கடல் எங்கு இருக்கிறது சார்?

(உபாத்தியாயர் பெரிய சந்தேகத்துடன்) உனது பூகோள படத்தை எடு. அதில் இருக்கிறதா என்று பார்ப்போம்.

## எதை எழுதுவது?

எதை எழுதுவது? என்று ஓர் நாள் நம் கவிஞருக்குச் (பாரதிதாசனுக்கு) சந்தேகம் பிறந்தது. தாமரை தன் அழகைக் காட்டி, எழுதச் சொல்லிற்றாம்; காடும் கழனியும், கார்முகிலும்

34953
MARAIMALAI
MADRAS

கலாப மயிலும், மயிலனைய மாதரும், செவ்வானமும், அன்னமும், வீரமும், பிறவும், என்னைப்பற்றி எழுது! என் எழிலைப்பற்றித் தீட்டு என்று கூறினவாம்.

## சென்னை பேசுகிறது

இராமகிருஷ்ண மடம்—மயிலை பயங்கரதேவ வழிபாடு என்பது பற்றி உபந்நியாசம்.

தொண்டைமண்டலம் பள்ளியிலே—பாகவத விஜயம் —காலட்சேபம்

பக்தி—நிஷ்காம கர்மம் என்பதுபற்றி, ராயப்பேட்டை கௌடிய மடத்தில் உபந்நியாசம்.

ஸ்கந்தபுராணம்—யுத்தகாண்டம் என்பது பற்றிப் பெரம்பூரில் காலட்சேபம்.

கீதார்த்த தத்துவத்தைப் பற்றி—எழும்பூரில் உபந்நி யாசம்.

நுங்கம்பாக்கத்தில் சங்கராச்சாரி உபதேசம்—உபநிஷத் பாஷ்ய உபதேசம்—ஒரு சாஸ்திரியால்.

புரசவாக்கத்தில்—ஜீவன் முக்தி விவேகத்தைப்பற்றி விளக்கம்.

சிந்தாதிரிப்பேட்டையில், பழமிமலை திருவிளையாடல்—உபந்நியாசம்.

கம்பராமாயண உபந்நியாசம் மாம்பலத்தில்—இப்படி யிருக்கிறது நிகழ்ச்சிகள். மற்றவைகளிலே பெரும்பாலானவை—சங்கீதம், நடனம்.

சென்னை பேசுவது இது! சரியா? முறையா? தேவையா?

## மாநாடுகள்

திடீர் திடீரென்று கூட்டப்படும் மாநாடுகளின் பயன் என்ன என்பது, கூடிக் கலந்த பிறகுதான் கணக்குப் பார்க்க முடியும். முன்கூட்டிக் கூற முடியாது. கருவிலுருவாகி வந்து, வயதளவிலே வளர்ந்து வெளிவந்த பிறகு தான் தெரியும்.

## நிலைக்கேற்ற நினைப்பில்லை

திருட்டுத்தனமாகக் கனி தேடி மரம் ஏறியவனுடைய நினைப்பு எப்படியிருக்கும்? எந்த அளவுக்கு அவன் நிலை உயர்ந்திருக்கிறதோ, அந்த அளவுக்கு அவன் நினைப்பும் தாழ்ந்திருக்கும். முதலில் கனி பறித்து, பிறகு அவசர அவசரமாகத் தோட்டத்துக்குச் சொந்தக்காரன் வந்து விடுவானோ, வந்து விட்டால் என்ன செய்வானோ என்ற பயத்தில் செங்காய்களைப் பறித்து, அதன் பின் காய்களையும் பறிப்பான். கனி பறிக்கையில் அவனது பாரத்தால் மரம் குலுங்கும்பொழுதெல்லாம் அவன் மனம் பயத்தால் குலுங்கும். அடிக்கடி தோட்டத்துக்குச் சொந்தக்காரன் வந்தால், எப்படிக் குதித்து எங்கு ஓடுவது என்று நினைப்பான். அவன் இருப்பது மரத்தின் உச்சியில்; ஆனால் அவன் மனம் இருப்பது தரையில்!

## அந்தக்கால நிலை

தமிழகத்திலுள்ள மாந்தோப்புகளும், குன்றுகளும், கோபுரங்களும், வாவிகளும், வயல்களும், எத்தகைய எண்ணங்களை ஆரியர்களுக்குத் தந்திருக்கும்? நிச்சயம் தமிழர்களைப் பார்த்து, அவர்கள் கேட்டிருப்பார்கள். 'மெல்லிய ஆடை அணிந்திருக்கிறீர்களே! அது ஏது?' என்று. தமிழர்கள் 'அது எங்கள் கைத்திறமை; இந்திரன் தந்த— வரப்பிரசாதமல்ல' என்று கூறியிருப்பார்கள். 'இமயம் வரை சென்று உங்களது இலச்சினையைப் பொறித்திருக்கிறீர்களே, அது எப்படி?' என்று கேட்டிருப்பார்கள். அதற்குத் தமிழர்கள், அது 'கருடாழ்வார் கடாட்சத்தாலல்ல; எங்கள் தோள் வலிமையினால்' என்று கூறியிருப்பார்கள். இன்னும், 'உங்களது இசை இன்பமாயிருக்கிறதே, அது எப்படி' என்று ஆரியர்கள் தமிழர்களைப் பார்த்துக் கேட்டிருப்பார்கள். அதற்குத் தமிழர்கள் 'நாரதர் தந்தியில் மீட்டும் தேவகானமல்ல; நாங்கள் கண்டு பிடித்த யாழின் தன்மையது' என்று கூறியிருப்பார்கள். 'மீண்டும், அந்த யாழ் ஏது?' என்று கேட்டிருப்பார்கள். 'அது திருப்பாற் கடலில் கடைந்தெடுத்ததல்ல; எங்கள் இசையறிவில் கடைந்தெடுத்தது என்று கூறியிருப்பார்கள். ஆரியர்கள் முத்தைப் பார்த்து 'அது என்ன?' என்றிருப்பார்கள். 'அது தேவலோகத்துச் சரக்கல்ல. எமது தீரர்கள் கடலில் முழுகிக் கண்டெடுத்த முத்து' என்றிருப்பார்கள் தமிழர்கள்.

## தெரியும் தெரியாது

அமெரிக்காவின் தலைநகரம் எது தெரியுமா? தெரியாது. பெர்லின் எங்கு இருக்கிறது தெரியுமா? தெரியாது. மடகாஸ்கர் எங்கிருக்கிறது தெரியுமா? தெரியாது. கடலுக்குள் போகிற கப்பல் தெரியுமா? தெரியாது. சரி, எமதர்மனுடைய வாகனம் எது தெரியுமா? "அதாங்க எருமைக்கடா" என்று கூறுவார்கள். எப்படி இருக்கிறது அவர்கள் அனுபவம்.

## அது என்ன கோயிலுங்க?

நீங்கள் ரயிலில் செல்லும்பொழுது கவனித்திருக்கலாம். உங்களுக்குப் பக்கத்தில் உள்ள ஒரு கிராமத்தாரிடம், ஏறிச் செல்லுகிற ரயிலைப்பற்றி, ரயில் கண்டு பிடித்தவனைப் பற்றி, ரயில் எப்படி ஓடுகிறது என்பதைப் பற்றி, ஓடிக்கொண்டிருக்கிற ரயிலை ஒரு நொடியில் எப்படி எதிரே உள்ள கைப்பிடியால் நிறுத்தலாம் என்பதைப் பற்றிக் கூறுங்கள். ஜன்னல் வழியாக எதையோ கவனித்துக்கொண்டு காதில் விழாதது போலவே இருப்பார். ஆனால் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ஜன்னல் வழியாகத் தெரியும் ஒரு குன்று; குன்றின்மேல் தெரியும் கோபுரம்; கோபுரத்தின்மேல் தெரியும் விளக்கு. அவைகளைக் கவனித்துப் பார்ப்பார். உடனே பக்கத்திலுள்ளவரைப் பார்த்துக் கேட்பார்—தூங்கினாலும் தொடையை கிள்ளிக் கேட்பார்—அது என்ன கோயிலுங்க?

## மாஸ்கோவும் மயிலையும்

தோழர் மா. சிங்காரவேலரே, ஏகாதிபத்தியத்தால் தாக்கப்பட்ட முதல் வீரர்-ஆனால் முப்புரி இல்லாத காரணத்தால் மங்கினார்; அவருடைய பெருமைப் பாக்கள், படத்திறப்பு விழாக்கள், இல்லை! இரா! அவர் மா. சிங்கார வேலுச் செட்டியார்; பரதவர் குலம்; (மீன் பிடிப்போர்) நெய்தல் நில நாயகன்; சிங்காரவேல் சர்மாவாக இருந்திருந் தால், அவருடைய சிலையை மாஸ்கோவிலே நிறுவ வேண்டு மென்று மயிலை கூறும்.

## கணக்கு

நமது பிள்ளைகளிடம், "நான் நான்கு மாம்பழங்கள் வைத்திருந்தேன். அதை இரண்டு பேருக்குக் கொடுத்தால் ஆளுக்கு எத்தனை மாம்பழம்?" என்று கணக்குப் போடு வோம்; பிள்ளைகளோ மாம்பழம் ஆளுக்கு எத்தனை என்று யோசிப்பதில் நினைப்பை அதிகமாகச் செலுத்துவார்கள். ஆனால் இப்படியல்ல ஜெர்மனியில் கணக்குப் போடுவது.

## குற்றம்

மான், குற்றம் செய்யாமலா, புலியார் தண்டிக்கிறார்! ஏன், மான் அழகான கண்களைக் காட்டிற்று! புள்ளிமான் துள்ளி விளையாடுவதா! கள்ளங்கபட மற்று ஓடுவதா? சருகு உதிரும் சத்தம் கேட்டாலும் மருண்டு ஓடுவது ஒரு குற்றமல்லவா?. சாதுவாக இருப்பது மற்றோர் குற்றம்!

பதுங்கிப் பாய்வது, பல்லால் கடிப்பது; நகத்தால் கிழிப்பது; இரத்தம் குடிப்பது; உறுமுவதுபோன்ற ஒரு நற்பண்பும் இல்லை! இவைகளைப் பொறுத்தல் குற்றமல்லவா? புலியார் எத்தனை குற்றங்களைத்தான் பொறுப்பார்! ஆகவே தான், குற்றம் செய்த மானைத் தண்டித்தார்.

## ஒரு வரியில் அண்ணா மொழிகள்

1. அழகு ஒரு ஆபத்தான ஆயுதம்.

2. அடிமைத்தனம் ஒரு கூட்டுச் சரக்கு.

3. விதி-நமது பரம்பரை நோய்; பூர்வீகச் சொத்து.

4. வாழ்க்கைத் துறையிலே மிக முக்கியமான-ரசமான-கட்டம் காதல்.

5. வீடு எங்ஙனமோ அங்ஙனமேதான் நாடு இருக்கும்.

6. புரட்சி என்பது இயங்கும் சக்தி.

   புரட்சி மக்களின் போராடும் சக்தியின் வழி வருவது.

   புரட்சி வாலிபத்தின் கூறு; பகுத்தறிவாளர் ஆயுதம்.

7. சட்டம் ஒரு இருட்டறை—வக்கீலின் வாதம் ஒரு விளக்கு.

8. வாலிபர்கள், உரிமைப் போர்ப்படையின் ஈட்டி முனைகள்.

வாலிபர்கள் நடமாடும் எஃகுக் கம்பிகள்.
வாலிபர்கள் அகத்திலே அருவிபோல ஆர்வமுண்டு.

9. பகுத்தறிவு என்னும் மருந்தால் வைதிகம் என்னும் நோயைப் போக்க முடியும்.

10. மனிதன் மனிதனாக வாழ வழி கண்டுபிடிக்கும் வேலை, வாலிபர்கள் முன் இருப்பது.

11. வாலிபர்களுக்குப் பகுத்தறிவும், சுயமரியாதை உணர்ச்சியும் தேவை. புதுவாழ்வு பெற...முழு வாழ்வு பெற.

12. அறிவு நாள் இது! கொடுமை அழிந்தே தீரும்.

13. சமயமெனும் மூளையிலே, தமிழ் நட்டால் முளைக்காது.

14. விழிப்போரே நிலை காண்பார்! விதைப்போரே அறுத்திடுவார்.

15. மறை அறியார் எனினும் அவர் மறையவராம்.

16. பனியா இங்கே சேட்டு! தமிழர் அங்கே கூலி!!

17. பித்தேறி மேல் கீழ் என்று பேசுவோர் உறவு வேண்டாம்.

18. முன்னூலே அயலான் முறித்தான் நஞ்சால்.

19. நடைக்கற்கள் உண்டு! தடந்தோள் எங்கே!

20. புரோகித ஆட்சியை ஒழி; புதியதோர் உலகு செய்.

21. சக்திக்கேற்ற உழைப்பு; தேவைக்கேற்ற வசதி.

22. உருட்டும் கண்! மிரட்டும் சொல். ஒரு காலத்திலே ஆதிக்கக் கருவிகள்.

23. பேச்சு—கருத்தின் தொகுப்பு.

24. சிந்தனை — காண்பன கேட்பனவற்றிலே தொடர்ந்து ஏற்படும்.

25. பணத்துக்கு இருக்கும் காந்த சக்தி விசித்திரமானது.

26. கலியாணம் செய்துவைக்கப்பட்டது என்பதற்கும், செய்துகொண்டான் என்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம்.

27. தமிழே இசையுருவாக அமைந்தது. இசையே, தமிழில் முதன்முதலில் தோன்றியது.

28. மான் மந்தையைச் சிறு ஓநாய்க் கூட்டம் விரட்டியடிக்க முடியும்.

29. பாம்பு படையைக் கலக்கும்.

30. அந்தச் சிறு கூட்டத்தின் ஆணவத்தை அடக்கத் தமிழர் எழுச்சிபெற வேண்டும்.

31. உழைப்பே செல்வம்—உழைப்பார்க்கே உரிமையெல்லாம்; உழைப்பாளிக்கே உலகம் உரியது.

32. புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்.

33. காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்; அவன், காணத் தகுந்ததும் வறுமையாம்; அவன் பூணத் தகுந்ததும் பொறுமையாம்.

34. வளமையினருகே வறுமை; பலத்தினருகே பயம்; இவை ஏன்?

35. இயக்கம் நமது வியர்வையிலும், கண்ணீரிலும், உழைப்பிலும் இருக்கிறது.